**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.43/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.சஞ்சீவ் குமார் |
| Father Name | திரு.சந்திரசேகரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.11.2025.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தோல்பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் செய்து வருகிறேன். 1994 முதல் அந்த வியாபாரம் செய்துவருகிறேன். என்னுடைய நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் முன்பு சென்னையிலும், தற்போது இராணிப்பேட்டையிலும் உள்ளது. 1–ம் பிரதிவாதியிடம் நான் கடன் வாங்கும் போது எங்கள் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையிலிருந்தது. எங்கள் நிறுவனத்தில் நானும், என் அப்பாவும், சகோதரர்களும் பங்குதாரர்களாக இருக்கிறோம். என்னுடைய தனிப்பட்ட பெயரிலோ அல்லது எங்களுடைய பங்குதாரர் நிறுவனம் சம்மந்தமாக இன்சால்வன்சி நடவடிக்கை எதுவுமில்லை. நான் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியதாக வழக்கு நிலுவையில் இல்லை. எங்கள் நிறுவனம் கடன் பெற்றது சம்மந்தமாக வேறு வழக்கு உள்ளது. எங்கள் பங்குதாரர் நிறுவனத்தில் நான் தான் அதிக பங்குகளை வைத்திருக்கிறேனா என்றால் அனைத்து பங்குதாரர்களும் சமமான பங்குகளை வைத்துள்ளோம். எங்கள் நிறுவனத்திற்கு இயக்குநர்கள் தீர்மானம், பதிவுச்சான்று உள்ளதா என்றால் பங்குதாரர் நிறுவனத்திற்கு அவை தேவையில்லை. பங்குதாரர் பத்திரமும், சரக்கு மற்றும் சேவை வரி பதிவும் உள்ளது. எங்களுடைய நிறுவனத்திற்கு இயக்குநர்கள் தீர்மானம் மற்றும் பதிவுச்சான்று அவசியம் என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1–ம் பிரதிவாதியிடம் எங்கள் நிறுவனத்திற்காக தான் கடன் பெற்றேன். எங்கள் நிறுவனம் சம்மந்தமாக வழக்குகள் ஏற்பட்டால் அதை சென்னை வரையறைக்குள் உள்ள நீதிமன்றங்களில் தான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவன தீர்மானத்தை பார்த்தால் வழக்கு எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்று தெரிய வரும் என்றால் எங்கள் நிறுவனம் பங்குதாரர் நிறுவனம் ஆகும். எந்த வருடம் பங்குதாரர் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. பங்குதாரர் பத்திரம் எங்கள் அலுவலத்திலுள்ளது. பங்குதாரர் பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நிறுவனம் சம்மந்தமாக வழக்கு ஏற்பட்டால் எந்த

வரையறைக்குட்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென பங்குதாரர் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்பதை அந்த ஆவணத்தை நான் பார்த்து தான் சொல்ல முடியும். வழக்கு சொத்தை 1–ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்தது எங்கள் நிறுவனத்திற்காகவா என்றால் இல்லை. நான் தனிப்பட்ட முறையில் அடமானம் வைத்தேன். 1–ம் பிரதிவாதியிடம் எங்கள் நிறுவனத்திற்காக தான் வழக்கு சொத்தை அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியை சுமார் 15 முதல் 20 வருடங்களாக தொழில்ரீதியாக தெரியும். எங்கள் நிறுவனத்திற்கு 1–ம் பிரதிவாதியுடன் தான் பணம் பட்டுவாடா தொடர்பு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக அடமானப்பத்திரம் 1–ம் பிரதிவாதியுடன் செய்யப்பட்டுள்ளதா என்றால் 2–ம் பிரதிவாதியின் மனைவி நிர்மலா தேவி என்பவருடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதியின் பெயரில் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது அவர் 1–ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர் என்ற வகையிலா என்றால் இயக்குநர் என்ற வகையிலும், அவர் 2–ம் பிரதிவாதியின் மனைவி என்ற வகையிலும் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 அடமானப்பத்திரம் 17.03.2011–ம் தேதி ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அடமானப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து மற்றும் புகைப்படம் என்னுடையது தான். வா.சா.ஆ.2 அடமானப்பத்திரத்தில் உள்ள சொத்தும், வழக்கு சொத்தும் ஒன்று தானா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 அடமானப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள சி.குமாரசாமி, ஆர்.ஜெயக்குமார் ஆகிய இருவரும் 2ம் பிரதிவாதியின் நண்பர்கள். வா.சா.ஆ.2 அடமானப்பத்திரம் ஏற்பட்ட தேதியிலிருந்து 8 வருடங்கள் 11 மாதங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(இருதரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.